அன்றன்றுள்ள அப்பம் வழங்கும்

# ஒலிவமரக் கன்றுகள்

செப்டம்பர் - 2025 | மரம் - 4 | கன்று - 9 | ஆண்டு சந்தா ரூ. 250/- | தனிப்பிரதி ரூ. 25/- | ஆயுள் சந்தா ரூ. 2500/-



## கர்த்தருக்குப் பயப்படுதல் ஞானத்தைப் போதிக்கும்; மேன்மைக்கு முன்னானது தாழ்மை.

நீதிமொழிகள் 15:33

ஆசிரியர்: J. ஜோசப் ஆஸ்பார்ன் ஜெபத்துரை



# மனம் விட்டு உங்களுடன்...

கிறிஸ்துவுக்குள் எனக்குப் பிரியமான செல்லப்பிள்ளைகள் மற்றும் அவர்களுக்கு வேத வசனக் கதைகளை எடுத்துச் சொல்லி தேவனுக்குள் வளர்த்தெடுக்கும் பெரியோர்கள் அனைவருக்கும் வாழ்த்துக்கள்.

தேவனுக்கும் நமக்கும் இடையேயான ஒரு தனிப்பட்ட உறவு நமக்கு உருவாக இந்த விசுவாசமே அடிப்படை. அதை ஒலிவமரக் கன்றுகள் இதழ் உங்களுக்குள் விசுவாச வளர்ச்சிக்கு உதவும் என்று நம்புகிறேன். உங்கள் பாராட்டுக் கடிதங்கள், குறைவிலும் அனுப்பித்து தருகின்ற பண உதவிகள், ஜெபங்கள், ஆலோசனைகள் என அனைத்திற்கும் மிக்க நன்றி சொல்கிறேன். இவையெல்லாம் இளம் தலைமுறை கிறிஸ்துவுக்குள் வளருவதற்கு நீங்கள் செய்யும் நீர்ப்பாய்ச்சல்களாகவும், உரமிடுதலாகவும் கருதுகிறேன். அவற்றிற்கான பலனை தேவன் கட்டளையிடுவாராக.

இயேசப்பா மீது வைக்கின்ற விசுவாசம் தான், சோதனைகளைக் கடக்கின்ற வலிமையை நமக்குத் தருகிறது. துயரமான வேளைகளில் ஆறுதலும், தடுமாறும் வேளைகளில் நம்பிக்கையும் தருவது விசுவாசமே!

விசுவாசம் என்பது தேர்வு அறைக்குள் நுழைவதற்கான ஹால்டிக்கெட் போல! ஹால்டிக்கட் மட்டுமே ஒருவருக்கு வெற்றியைத் தராது. வாழ்க்கை எனும் தேர்வில் நாம் என்ன எழுதுகிறோம் என்பதே நமது பரலோக வாழ்வை நிர்ணயிக்கும்.

உலகிற்கே சாட்சியாய் வாழவேண்டுமெனில் நமது செயல்கள் உலகிற்கு ஒளியாக இருக்க வேண்டும். நமது வாழ்க்கை உலகிற்கு உப்பாக இருக்க வேண்டும். வெறும் ஆரவார விளம்பர சத்தங்கள் அல்ல, நமது செயல்களே முக்கியம். அதனால்தான் நியாயத்தீர்ப்பு நாளில் அவனவன் செய்த மனிதநேயச் செயல்களை மட்டுமே பரலோக வாசலுக்குள் நுழைவதற்கான (பரி)சோதனையாய் வைக்கிறார்.

பைபிளில் இயேசுவைக் கொஞ்சம் கூட சந்தேகப்படாமல் விசுவாசிப்பவன் சாத்தான் தான் என காண்கிறோம். ஆனால் சாத்தானுக்கும் நமக்குமுள்ள சின்ன வித்தியாசம் ‘அவன் இயேசுவின் போதனைகளைக் கடைபிடிப்பதில்லை’. நாமும் விசுவாசம் மட்டும் வைத்துக் கொண்டு, அவரது போதனையின்படி வாழாவிடில் சாத்தானின் பிம்பங்களாகவே காணப்படுவோம்.

பரிசுத்த வேதாகமத்தில் காகம் எலியாவுக்கு உணவு கொடுத்தது, கழுதை பேசி பிலேயாமை எச்சரித்தது, மீன் யோனாவை பாதுகாத்தது. இவையெல்லாம் தேவனின் கட்டளையை அப்படியே செயல்படுத்தியவை. ஆனால் அவற்றிடம் விசுவாசம் இல்லை. விசுவாசமே இல்லாமல் வெறும் செயல்களைச் செய்யும் போது நாம் விலங்குகளின் நிலைக்கு இறங்கும் அபாயமும் உண்டு.

விசுவாசமும், செயல்களும் இணைந்து பயணிக்கும் போது தான் அது முழுமையடைகிறது. ஒரு பறவையின் இரு சிறகுகள் போல விசுவாசமும் செயல்களும் இருக்கின்றன. இரண்டுமே சமமாய், ஆரோக்கியமாய் இருக்கும்போது தான் நமது கிறிஸ்தவ வாழ்க்கை உன்னத நிலைக்கு நம்மை எடுத்துச் செல்கிறது.

விசுவாசிப்போம், செயல்படுவோம், அவருக்குள் நிலையான வாழ்வைக் கண்டடைவோம்.



அன்புடனும், அக்கறையுடனும்:

*அங்கிள்.* **J. ஜோசப் ஆஸ்பார்ன் ஜெபத்துரை**

# கோதுமை



இயேசு அவர்களை நோக்கி: மனுஷகுமாரன் மகிமைப்படும்படியான வேளை வந்தது. மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், கோதுமை மணியானது நிலத்தில் விழுந்து சாகாவிட்டால் தனித்திருக்கும், செத்ததேயாகில் மிகுந்த பலனைக்கொடுக்கும் (யோவான் 12:23,24).

ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து தன்னை ‘கோதுமை மணி’ என்கிறார். செத்ததேயாகில் மிகுந்த பலனைக்கொடுக்கும் என்ற வசனத்தில் இயேசுகிறிஸ்து தன் சிலுவை மரணத்தின் மூலம் அனைவரையும் மீட்பதைப்பற்றி சொல்கிறார். அவரின் உயிர்த்தெழுதலின் பலனாக அநேக ஆத்துமாக்கள் மீட்கப்பட்டனர். அவரின் மகிமையுள்ள உயிர்த்தெழுதல் அன்றிலிருந்து இன்று வரை அநேகரை மாற்றி மிகுந்த பலனைக்கொடுத்திருக்கிறது.

ஒரே ஒரு கோதுமை மணி மண்ணில் விதைக்கப்பட்டு தன்னைத் தான் அழித்து கொள்கிறது. அது துளிர் விட்டு வளரும் போது நூறுக்கு மேற்பட்ட கோதுமை மணிகளை பலனாக தருகிறது. இதை போலவே ஆவிக்குரிய மனிதனின் வளர்ச்சியும் மிகுந்த பலனைக்கொடுப்பதாக இருக்கும். கோதுமை மணி தன் சாவை ஆதாயம் செய்து கொள்கிறது. கோதுமை மணி ஒன்றாக இருந்து நூறாக பலன் கொடுக்கிறது. இது போலதான் ஆவிக்குரிய மனிதனும் ஒருவனாக இருந்து பலரை தேவனுக்குள் கொண்டு வருகிறான். கோதுமை மணிக்கு ஒரு நோக்கம் இருக்கிறது. பிறருக்காக ஜீவனைக்கொடுப்பதாகும். கோதுமை மணிக்கு ஏற்கனவே ஜீவன் இருக்கிறது. கோதுமை மணியானது நிலத்தில் விழுந்து சாகும் போது புது ஜீவன் வருகிறது. அப்படி புது ஜீவன் வரும் போது நூறுமடங்கு பலன் தருகிறது. இந்த மாதம் கோதுமையைக் குறித்து பார்க்கலாம்.





**கோதுமை** (Wheat) என்பது தானிய வகைகளில் ஒன்றாகும். இதன் தாவரவியல் பெயர் Triticum. இது புல் வகையைச் சேர்ந்த தாவரமாகும். இதன் தாயகம் மத்திய கிழக்கின் லிவான்ட் பிரதேசம் மற்றும் எத்தியோப்பிய உயர்நிலங்களாகும். இது ஒரு குளிர்காலப் பருவ பயிர் மற்றும் வெப்பமண்டலத்தில் குளிர்காலத்தில் பயிரிடப்படுகிறது.

பொதுவாக, கோதுமை பலதரப்பட்ட மண்ணில் குறிப்பாக நடுத்தர முதல் கனமான மண் வரையிலும் நன்றாக செழித்து வளரும். நன்கு வடிகால் வசதி கொண்ட களிமண், கோதுமை பயிரிடுவதற்கு மிகவும் சிறந்த மண் வகை ஆகும். கோதுமை பயிர் வறண்ட மற்றும் குளிர்ந்த சுற்றுச்சூழலில் நன்றாக வளர்கிறது. கோதுமையை விதைத்த பிறகு அறுவடை செய்வதற்கு 130 நாட்கள் வரை ஆகும்.

உலகில் அதிகம் பயிரிடப்படும் உணவு தானியமாக கோதுமை உள்ளது. உலகெங்கிலும் 544.6 மில்லியன் ஏக்கர்களில் கோதுமை பயிரிடப்படுகிறது. அமெரிக்காவில் 1777-ம் ஆண்டில்தான் முதன்முதலில் கோதுமை பயிரிடப்பட்டது. அன்டார்டிகாவைத் தவிர அனைத்து கண்டங்களிலும் கோதுமை விளைகிறது. உலகெங்கிலும் 30 ஆயிரத்துக்கும் மேற்பட்ட கோதுமை வகைகள் இருப்பதாக கூறப்படுகிறது. உலகிலேயே சீனாவில்தான் அதிக அளவில் கோதுமை விளைவிக்கப்படுகிறது. இதற்கு அடுத்த இடத்தில் இந்தியாவும், ரஷ்யாவும் உள்ளன. உலகளவில், மனித உணவில் தாவரப் புரதத்தின் முக்கிய மூலமாக கோதுமையே விளங்குகிறது.

இந்தியாவில் மட்டும் இது அரிசிக்கு அடுத்தபடியாக இரண்டாவது முக்கியமான உணவுப் பயிராக பயிரிடப்படுகிறது. இந்திய மற்றும் பாகிஸ்தானின் பஞ்சாப் பகுதிகளிலும் வடக்குச் சீனப் பகுதிகளிலும் சிறப்பான நீர்ப்பாசன வசதிகளால் கோதுமை உற்பத்தி அதிகரித்துள்ளது. இந்தியாவில் உத்தரப்பிரதேசம், பஞ்சாப், ஹரியாணா, மத்தியப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில் அதிக அளவில் கோதுமை பயிரிடப்படுகிறது. பஞ்சாப் அதன் அதிக கோதுமை உற்பத்தியின் காரணமாக இந்தியாவின் கோதுமை களஞ்சியம் என்று அழைக்கப்படுகிறது. கோதுமை பஞ்சாபிகளின் முதன்மையான உணவு. தற்போது தென்மாநில மக்களிடமும், கோதுமை தனியிடம் பிடித்து வருகிறது. தமிழில் கோதுமை, இந்தியில் கெஹு, மலையாளத்தில் கோதம்பு, தெலுங்கு கோதுமா, பஞ்சாபியில் கனகா என அழைக்கப்படுகிறது.

கோதுமையில் வெண்கோதுமை, செங்கோதுமை என்பன இரு முக்கியமான வகைகளாகும். ஆயினும், வேறு பல இயற்கையான வகைகளும் உள்ளன. உதாரணமாக, எத்தியோப்பிய உயர்நிலங்களில் விளையும் ஊதா கோதுமையைக் குறிப்பிடலாம். மேலும் கறுப்பு, மஞ்சள் மற்றும் நீலக் கோதுமை போன்ற சத்துமிக்க ஆயினும் வர்த்தக ரீதியாகப் பயிரிடப்படாத கோதுமை வகைகளும் உள்ளன.

பொதுவான கோதுமையின் தாவரவியல் பெயர் டிரிடிகம் ஏஸ்டிவம். இது ரொட்டி கோதுமை என்றும் அழைக்கப்படுகிறது. உலகளவில் உற்பத்தி செய்யப்படும் கோதுமையில் தோராயமாக 95% பொதுவான கோதுமை ஆகும்.

மனித நாகரிக வளர்ச்சியின் ஆரம்ப கட்டங்களில், நகர்ப்புறச் சமுதாய வளர்ச்சியில் கோதுமை முக்கிய பங்கு வகிக்கிறது. ஏனென்றால் பரந்தளவில் இலகுவாகப் பயிரிடக்கூடிய தானியமாக கோதுமை இருப்பதாலும், நீண்டகாலத்துக்குக் களஞ்சியப்படுத்தி வைக்கக்கூடியதாகவும் கோதுமை இருக்கிறது. கோதுமை உணவுகள் மிகவும் சத்து மிக்கவை. கோதுமையை மாவாக்கி ரொட்டி, சப்பாத்தி, பூரி, கிச்சடி, அல்வா, பாண், பிஸ்கட், குக்கிஸ், கேக்குகள், பாஸ்தா, நூடுல்ஸ், கோஸ்கோஸ் போன்ற உணவுப் பொருட்கள் செய்யப்படுகின்றன. மாநிலத்துக்கு மாநிலம் மாறுபட்ட உணவு வகைகள் தயாரிக்கப்பட்டு உண்ணப்படுகிறது. மேலும், இதனைப் புளிக்கச்செய்து பியர், ஏனைய மதுபானங்கள் மற்றும் உயிரிஎரிபொருள் என்பனவும் தயாரிக்கப்படும். கால்நடைகளுக்கான தீவனப் பயிராகவும் சிறியளவில் கோதுமை பயிரிடப்படுகிறது. மேலும், இதன் வைக்கோல் கூரை வேயவும் பயன்படுகிறது.

முழு கோதுமை சாப்பிடுவதால் கிடைக்கும் நன்மைகள் பல. கோதுமையில் நார்ச்சத்து, புரதம், கால்சியம், மெக்னீசியம், பொட்டாசியம், பாஸ்பரஸ் மற்றும் உயிர்ச்சத்துக்கள் போன்ற பல சத்துக்கள் உள்ளன. மேலும் கோதுமையில் புற்றுநோயைத் தடுக்கும் வைட்டமின் ஈ, செலினியம் மற்றும் நார்ச்சத்து இருக்கிறது. எனினும் சுத்திகரிக்கப்பட்ட தானியத்தில் பெரும்பாலும் மாவுப்பொருட்கள் மட்டுமே உள்ளன.

கோதுமையில் எண்ணற்ற மருத்துவ பயன்கள் உள்ளன. முதுகுவலி, மூட்டுவலியால் அவதிப்படுபவர்களுக்கு கோதுமையை வறுத்து பொடித்து, அதனுடன் தேன் சேர்த்து உட்கொள்ள கொடுக்க அந்த வலி குணமாகும். வயிற்றில் புளிப்புத்தன்மை உடையவர்கள் மற்றும் புளித்த ஏப்பம் அடிக்கடி வருபவர்கள் கோதுமை ரவையை கஞ்சி செய்து குடித்தால் உடனே நிவாரணம் பெறலாம். கோதுமை மாவை அக்கிப்புண், நெருப்பு பட்ட இடம், மேல் தோல் உரிந்துபோன இடம் ஆகியவற்றில் தூவினாலும் அல்லது வெண்ணெய் கலந்து பூசினாலும் எரிச்சல் தணியும். கோதுமை மாவை களியாக செய்து கட்டிகளுக்கு வைத்து கட்ட அவை சீக்கிரம் குணமாகும். வியர்க்குருவால் அவதிப்படுபவர்கள் கோதுமை மாவை புளித்த காடி நீரில் கலந்து பூசிவர அவை விரைவில் மறையும். கோதுமையை உணவில் அதிகம் எடுத்துக் கொள்பவர்களுக்கு உடல் பலம் அதிகரிக்கும். உடல் எடையினைக் குறைக்க நினைப்போர் சப்பாத்தியாக மட்டுமல்லாமல், கோதுமையில் கஞ்சி, கோதுமையில் உப்புமா, கோதுமையில் தோசை என வித்தியாசமாக செய்து சாப்பிடலாம்.

கோதுமையை முந்தைய நாளே நீரில் ஊற வைத்து, காலையில் அடித்து பசையாக்கி, அதை மெல்லிய துணியில் இட்டு வடிகட்டி பிழிந்து வருகின்ற பால் கோதுமைப் பாலாகும். இந்த பாலை கப நோயாளிகள் பருக நல்ல பலன் கிடைக்கும்.

சம்பா கோதுமையைச் சாப்பிடும் போது சர்க்கரை வியாதி உள்ளவர்களுக்கு, சர்க்கரை அளவு கணிசமாகக் குறைகிறது. மேலும் மொத்த கொழுப்புச் சத்து அளவு மற்றும் டிரை கிளைசி ரைட்ஸ் அளவும் கணிசமாக குறைகிறது. கோதுமை என்பது அனைத்து காலத்திற்கும் ஏற்ற உணவு. குறிப்பாக இளம் தலைமுறையினர் கட்டாயம் எடுத்துக்கொள்ளவேண்டிய உணவுதான் கோதுமை.



சரி, கோதுமையினால் தீமைகள் ஏதும் இல்லையா என்றால், இருக்கிறது. அரிசியுடன் ஒப்பிடும்போது கோதுமை ஜீரணமாவதற்கு அதிக நேரம் எடுக்கும். சிலருக்கு கோதுமை செரிமானம் ஆகாமல் மந்தநிலை, வயிறு உப்புசம், வயிற்றுப்போக்கு போன்ற பிரச்னைகள் ஏற்பட வாய்ப்புள்ளது. முக்கியமாக, குளூட்டன் அலர்ஜி உள்ளவர்களும் வயிறு பிரச்சினை இருப்பவர்களும் கோதுமை மற்றும் கோதுமை பொருட்களை தவிர்ப்பது நல்லது.

**தேவன் தாம் உண்டாக்கின எல்லாவற்றையும் பார்த்தார். அது மிகவும் நன்றாயிருந்தது. சகலத்தையும் உண்டாக்கினவருக்கு நன்றி.**

# வேதாகம கதாநாயகர்கள்

**படங்களைப் பார்த்து கீழே கொடுக்கப்பட்டுள்ள பெயர்களை பொருத்துக:**



| | | | |
|---|---|---|---|
| **யாக்கோபு** (ஆதியாகமம்) | **ரூத்** (ரூத்) | **ஆதாம்** (ஆதியாகமம்) | **சாராள்** (ஆதியாகமம்) |

# அவர் வழி எப்பவும் தனி வழி தான்..

(ஆகார் வீட்டை விட்டு தப்பி ஓடி கால்கள் தளர்ந்து பாலைவனத்தில் நம்பிக்கையற்று வீழ்ந்த போது, ஒரு தேவதூதன் அவளைச் சந்தித்து அருகிலிருந்த நீரூற்றுக்கு அழைத்துச் செல்லுதல்)

'நீ சாராயின் பணிப்பெண்ணான ஆகார் அல்லவா? எங்கே ஓடுகிறாய்?' தூதர் கேட்டார்.

'ஐயா... சாராய்க்கு குழந்தைகள் இல்லை. எனவே நான் சாராயின் விருப்பப்படி ஆபிராம் மூலமாகக் கருவுற்றேன். கருவுற்றபின் சாராயின் மனது மாறிவிட்டது. அவள் என்னை எதிரியாய் பாவித்துக் கொடுமைப்படுத்துகிறாள். அதையெல்லாம் என்னால் சகித்துக் கொள்ள முடியவில்லை. எனவே தப்பி ஓடுகிறேன்' ஆகார் சொன்னாள்.



'நீ உன்னுடைய எஜமானியின் மனம் புண்படுமாறு நடந்திருக்கிறாய் என்பது எனக்குத் தெரியும்' தூதன் சொல்ல, ஆகார் மௌனமானாள்.

தூதன் அவளிடம், 'நீ இந்தப் பாலை நிலத்தில் அலையவேண்டாம். பேசாமல் சாராளிடமே போ. அவளைப் புண்படுத்தாமல் அவளுக்குப் பணிந்திரு. அது தான் நல்லது' என்றார்.

'இனிமேல் நான் அங்கே போனால் என்னால் அமைதியாக வாழமுடியுமா?' ஆகார் பயந்தாள்.

'எதற்கும் கவலைப்படாதே. நீ ஒரு மகனைப் பெற்றெடுப்பாய். அவளுக்கு இஸ்மவேல் என்று பெயரிடு. இது தேவனுடைய வாக்கு' தூதர் சொல்ல ஆகார் முகம் மலர்ந்தாள்.

'என்னுடைய மகன் நல்லமுறையில் வளர்வானா? என்னுடைய குலம் வளருமா?' ஆகார் கேட்டாள்.

'உன் சந்ததியினரை தேவன் ஏராளமாகப் பெருகச் செய்வார். நீ ஒரு மிகப்பெரிய குலத்தை அறிமுகம் செய்து வைத்த பெருமையைப் பெறுவாய். ஆனால் இஸ்மவேல் தான்...' தூதர் இழுத்தார்.

'ஏன்? என் மகனுக்கு என்ன ஆகும்?' ஆகார் பதட்டத்துடன் கேட்டாள்.



'உன் மகன் இஸ்மவேலை எல்லோரும் எதிர்ப்பார்கள். அவன் யாருடனும் இணக்கமாக இருக்க மாட்டான். ஒரு காட்டுக் கழுதையைப் போல அவன் வாழ்வான்.'

தூதர் சொன்னதைக் கேட்ட ஆகார் கவலையடைந்தாள். ஆனாலும் தன் குலம் நன்றாகச் செழிக்கும் என்னும் எண்ணம் அவளுக்கு ஆறுதலைத் தந்தது. அவள் ஆபிராமிடம் திரும்பினாள்.

அதன் பின் ஆகார் அமைதியாக தன்னுடைய நாட்களைக் கழித்தாள். பேறு காலம் வந்தபோது அவள் ஒரு மகனைப் பெற்றெடுத்தாள்.

ஆகார் ஆபிராமை நோக்கி ‘குழந்தைக்கு ஏதேனும் பெயர் யோசித்து வைத்திருக்கிறீர்களா? நான் ஒரு பெயரை யோசித்து வைத்திருக்கிறேன்’ என்று கேட்டாள்.

‘இவனுக்கு நான் இஸ்மவேல் என்று பெயரிடுகிறேன்’ ஆபிராம் சொன்னார்.

ஆகார் ஆச்சரியமடைந்தாள். ‘நானும் இவனுக்கு இஸ்மவேல் என்று தான் பெயரிட நினைத்தேன். அது தேவ தூதர் என்னிடம் சொன்ன பெயர்’ என்று ஆகார் சொல்ல ஆபிராம் தேவனின் செயலை எண்ணி வியந்தார். அவர்கள் இருவரும் தேவனைப் பணிந்து நன்றி செலுத்தினர். அப்போது ஆபிராமுடைய வயது எண்பத்து ஆறு.

* * *

ஆபிராமுக்கு தொன்னூற்று ஒன்பது வயதானபோது தேவன் ஆபிராமோடு மீண்டும் பேசினார்.

‘ஆபிராம். நீ எப்போதும் என்னுடைய வழிகளை விட்டு விலகாமல் இருப்பதால் நான் மிகவும் மகிழ்கிறேன். உனக்கு ஏராளமான செல்வங்களையும், குழந்தைகளையும் தருவேன்.’

ஆபிராம் தேவனைப் பணிந்தார். தேவன் தொடர்ந்தார்.

‘இன்று முதல் நீ ஆபிராம் என்றல்ல ஆபிரகாம் என அழைக்கப்படுவாய். உன் சந்ததியினருக்கு இந்த கானான் தேசம் முழுவதையும் கொடுப்பேன். அவர்களுக்கு நானே தேவனாய் இருப்பேன். உன் வம்சத்தினர் அனைவரும் விருத்த சேதனம் செய்து கொள்ள வேண்டும். பிறக்கும் குழந்தைக்கு எட்டாம் நாளில் விருத்த சேதனம் செய்தாக வேண்டும். வேற்று இனத்துப் பிள்ளைகளை எடுத்து வளர்த்தால், அவர்களுக்கும் விருத்த சேதனம் செய்தாக வேண்டும்’.



‘இனிமேல் உன் மனைவியை சாராய் என்று அழைக்காதே. இனி அவள் சாராள் என்று அழைக்கப்படட்டும். அவள் கருத்தாங்கி ஒரு மகனைப் பெற்றெடுப்பாள்’ என்றார்.

ஆபிரகாம் உள்ளுக்குள் சிரித்தார். நூறு வயதிலா எனக்குக் குழந்தை? தொன்னூறு வயது சாராளா தாய்மையடையப் போகிறாள் என உள்ளுக்குள் நினைத்தார்.

‘எனக்கு இஸ்மவேலே போதும் தேவனே. அவனுக்கு நீர் நீண்ட ஆயுளைக் கொடுத்தால் போதும்’ ஆபிரகாம் சொன்னார்.

‘ஏன் என்னுடைய வார்த்தைகளில் உனக்கு நம்பிக்கை குறைந்துவிட்டதா என்ன? சொல்வது உன் தேவன். உனக்கும் சாராளுக்கும் குழந்தை பிறக்கும், அவனுக்கு ஈசாக்கு என்று பெயரிடு. ஈசாக்கு பிறந்தாலும் நான் இஸ்மவேலைக் கைவிடமாட்டேன். அவனையும் நான் பெரியவனாக்குவேன். பன்னிரண்டு இளவரசர்களுக்கு அவன் தந்தையாவான். அவனிடம் இருந்து பெரிய நாடு ஒன்று தோன்றும்’ சொல்லிவிட்டு தேவன் அகன்றார்.

ஆபிரகாம், தேவன் தம்மிடம் சொன்னபடியே, இஸ்மவேல் உட்பட தம் வீட்டில் பிறந்த ஆண்களுக்கும், விலைக்கு வாங்கிய ஆண்களுக்கும் விருத்த சேதனம் செய்தார். தானும் விருத்த சேதனம் செய்து கொண்டார்.

சில நாட்களுக்குப் பின் ஆபிரகாம் மம்ரே என்னுமிடத்தில் தேவதாரு மரங்களின் அருகே கூடாரம் அமைத்து அதன் வாசலருகே அமர்ந்திருக்கையில் ஆண்டவர் அவருக்குத் தரிசனமானார். திடீரென மூன்று மனிதர்கள் அவருக்கு முன்னால் சற்று தொலைவில் வந்து நின்றார்கள். அவர்களைக் கண்டவுடன் ஆபிரகாம் ஓடோடிச் சென்று அவர்களுடைய பாதங்களில் வீழ்ந்து வணங்கினார்.

‘வாருங்கள்... நான் உங்கள் கால்களைக் கழுவ தண்ணீர் எடுத்து வருகிறேன். நீங்கள் இந்த மரத்தடியில் அமர்ந்து இளைப்பாறுங்கள். உங்களுக்கு உண்பதற்கும் உணவு கொண்டு வருகிறேன். நீங்கள் உண்டு பசியாறி பின்பு உங்கள் பயணத்தைத் தொடருங்கள்’ விருந்தோம்புதலில் சிறந்தவரான ஆபிரகாம் வழிப்போக்கர்களை உபசரித்தார். அவர்கள் தேவதூதர்கள் என்பது அவருக்குத் தெரிந்திருக்கவில்லை.

ஆபிரகாமின் அன்பில் வந்தவர்கள் மகிழ்ந்தார்கள். இளைப்பாறிவிட்டுப் பயணத்தைத் தொடரச் சம்மதித்தனர். ஆபிரகாம் கூடாரத்தினுள் சென்று சாராளிடம் அப்பங்கள் தயாராக்கச் சொல்லிவிட்டு, மந்தைக்குச் சென்று கொழுத்த கன்று ஒன்றை அடித்து சமைத்து அவர்களுக்குப் பரிமாறினார். அவர்கள் உண்ணும்போது அவர்கள் அருகிலே நின்று அவர்களைக் கவனித்துக் கொண்டிருந்தார்.

அவர்களில் ஒருவர் ஆபிரகாமை நோக்கி ‘உன் மனைவி சாராள் எங்கே?’ என்று கேட்டார்.

ஆபிரகாம் வியந்தார். வழிப்போக்கர்களுக்கு தன் மனைவியின் பெயர் எப்படித் தெரிந்தது? அதுவும் தேவன் கொடுத்த சாராள் என்னும் பெயர் இவர்களுக்கு எப்படித் தெரியும் என வியந்தார். வந்திருப்பவர் தேவனே என்று கண்டு கொண்டார்.

‘சாராள்.. அதோ அந்தக் கூடாரத்தில் இருக்கிறாள்.’

‘நான் மீண்டும் உன்னைச் சந்திக்க இளவேனிற்காலத்தில் வருவேன். அப்போது அவளுக்கு ஒரு மகன் இருப்பான்.’

கூடாரத்துக்குள் இருந்த சாராளின் காதுகளில் தூதரின் வார்த்தைகள் விழுந்ததும் சாராள் சிரித்தாள். ‘இது நல்ல கதையாக இருக்கிறதே! நான் சாவை நெருங்கிக் கொண்டிருக்கும் ஒரு கிழவி, ஆபிரகாம் உடல் தளர்ந்து போன ஒரு கிழவர். எங்களுக்கா குழந்தை? எங்கள் உடல் அந்த நிலையை எல்லாம் எப்போதோ கடந்து விட்டதே’ என்று மனதுக்குள் எண்ணிக் கொண்டாள்.

தேவன் ஆபிரகாமிடம், ‘ஆபிரகாம், நம்பிக்கை தான் மனிதனின் முதல் தேவை. சாராள் தேவனின் வார்த்தைகளை நம்பாமல் நகைக்கிறாள். அவள் கூடாரத்தில் சிரித்துக் கொண்டிருக்கிறாள். கர்த்தரால் ஆகாத காரியம் உண்டோ? பின் ஏன் சாராள் சந்தேகப்பட்டு சிரிக்கிறாள்’ என்று கோபத்துடன் கேட்டார்.

அதைக் கேட்ட சாராள் நடுங்கினாள். பயம் வந்து அவளைப் பிடித்துக் கொண்டது.

‘ஐயோ... நான் சிரிக்கவே இல்லை...’ என்று மறுத்தாள்.

‘காதில் விழுவதை மட்டுமே கேட்பது மனிதனுடைய காதுகள். மனதில் ஒன்றை நினைப்பதற்கு முன்பே அதைக் கேட்கும் சக்தி எனக்கு உண்டு.. என்னிடம் பொய் பேசவேண்டாம்’ என்று தேவன் சொல்ல சாராள் மௌனமானாள்.

தேவன் ஆபிரகாமிடம் ‘உன் சந்ததியை நான் வளப்படுத்துவேன் என்று மீண்டும் மீண்டும் உன்னிடம் கூறுகிறேன்’ என்று சொல்லிவிட்டு விடைபெற்றார்.

தொடரும்...

# கர்த்தரால் ஆகாத காரியம் உண்டோ?

**ஆதியாகமம் 16,17,18ஆம் அதிகாரங்களைப் படித்து கேள்விகளுக்கு விடையளியுங்கள்.**




1. உன் சந்ததியை மிகவும் பெருகப்பண்ணுவேன் என்று ஆகாரிடம் கூறியது யார்?
2. காதேசுக்கும் பாரேத்துக்கும் நடுவே இருக்கிற துரவின் பெயர் என்ன?
3. ஆகார் கர்த்தருக்கு என்ன பேரிட்டாள்?
4. ஆபிராம் ஆகார் பெற்ற தன் குமாரனுக்கு என்ன பேரிட்டான்?
5. ஆபிராமின் பெயரை கர்த்தர் என்ன பெயராக மாற்றினார்?
6. உன் மனைவியாகிய சாராளுக்கு ஒரு குமாரன் இருப்பான் என்று தேவன் ஆபிரகாமுடன் கூறிய போது நகைத்தது யார்?
7. மம்ரேயின் சமபூமியிலே ஆபிரகாமுக்கு பகலின் உஷ்ணவேளையில் தரிசனமானவர்கள் எத்தனை புருஷர்?
8. இஸ்மவேலுடைய விருத்தசேதனம்பண்ணப்படும்போது, அவன் எத்தனை வயதாயிருந்தான்?
9. சாராள் உனக்குப் பெறப்போகிற ................................ நான் என் உடன்படிக்கையை ஏற்படுத்துவேன் என்றார்.
10. அவன் பன்னிரண்டு பிரபுக்களைப் பெறுவான்; அவனைப் பெரிய ஜாதியாக்குவேன் என்று தேவன் யாரைக் குறித்து கூறினார்?

விடைகள் 17ஆம் பக்கம் பார்க்கவும்

# கழுதை

கழுதையின் படத்தைப் பார்த்து நீங்களே வரைந்து பழகுங்கள் குழந்தைகளே.



# கழுதை

ஆதி காலத்திலும், பழைய ஏற்பாட்டு நாட்களிலும், கழுதைகளை வளர்ப்பதும் மேய்ப்பதும் முக்கியமான தொழிலாக இருந்தது. ஆடுகள் உள்ளவன் அந்தஸ்து மிக்கவனாகவும், மாடுகளை உடையவன் செல்வந்தனாகவும், கழுதைகளை உடையவன் பெரிய வியாபாரியாகவும் கருதப்பட்டான். ஏனென்றால் வியாபார பொருட்களை ஒரு இடத்தில் இருந்து மற்றொரு இடத்திற்கு கொண்டு செல்வது இந்த கழுதைகள் தான். இராஜாக்களே பல நேரங்களில் குதிரையில் ஏறுவதை விட, கழுதையின் மேல் ஏறுவதை பெருமையாக நினைத்தனர். ராஜாவின் கழுதைகள் என்றே தனியாகவும் வளர்த்தார்கள் (1இரா 1:38). இவைத் தவிர பெரிய பெரிய யுத்தத்தில் கலந்துக் கொண்ட கழுதைகளும் உண்டு. முழு வேதாகமத்திலும் மிக அதிகமான கழுதைகள் தேவமனுஷனான மோசேயிடம் ஏறத்தாழ 61000 கழுதைகள் இருந்துள்ளது (எண். 31:34).



‘‘சீயோன் குமாரத்தியே, மிகவும் களிகூரு; எருசலேம் குமாரத்தியே, கெம்பீரி; இதோ, உன் ராஜா உன்னிடத்தில் வருகிறார்; அவர் நீதியுள்ளவரும் இரட்சிக்கிறவரும் தாழ்மையுள்ளவரும், கழுதையின் மேலும் கழுதைக்குட்டியாகிய மறியின்மேலும் ஏறிவருகிறவருமாயிருக்கிறார்’’ (சகரியா 9:9).

இந்த பூமியில் ஒரு நாள் ராஜாதி ராஜாவாகிய இயேசு கிறிஸ்து ஏழை தச்சனுக்கு மகனாக பிறந்து, மூன்றரை வருடம் ஊழியம்செய்து, ஒரு கழுதையின் மேல் ஏறி பவனி வந்தார். அவர் தாழ்மையுள்ளவர். வஸ்திரங்கள் போடப்பட்ட அந்த கழுதையின் மேல் இயேசு ஏறினார். பாக்கியமான கழுதை! பரிசுத்தர் அதன் மேலிருக்கிறார். அதற்கு இஷ்டமான பாதையில் இனிப்போக முடியாது. தாறுமாறாய் ஓட முடியாது. அவர் நடத்துகிற வழியில் அவரை சுமந்து கொண்டு போக வேண்டும். இனி இயேசுவே அதன் நல்ல மேய்ப்பர். ஒரு காலத்தில் உலகத்தின் அழுக்கு, பாரங்களையெல்லாம் சுமந்து, அலுத்து இளைத்துப்போன கழுதை, இப்போது தனது சிருஷ்டி கர்த்தாவாகிய இயேசுவை சுமக்கிறது. கழுதை நீதியின் பாதையில், பரிசுத்த பாதையில், இரட்சிப்பின் பாதையில், ஆண்டவருக்கு பிரியமான பாதையில் நடந்து செல்கிறது. ஓசன்னா!!! ஓசன்னா!!! என்ற இனிய பாடலின் வாழ்த்தொலி கேட்டு ஜெய கம்பீரத்தோடு ராஜாதி ராஜாவை சுமந்து கொண்டு எருசலேம் பட்டணத்துக்கு நேராக மகிழ்ச்சியோடு முன்னேறி செல்கிறது.

அதற்கு தேவையான யாவும் அதன் காலடியில், அதன் முன்னே வந்து விழுகிறது. இயேசுவை சுமக்கும் கழுதை பெறும் பாக்கியம் இதுதான். நாமும் இந்த பாக்கியத்தை பெற இயேசுவின் வார்த்தைக்கு கீழ்ப்படிந்து, கட்டுண்டவர்களை விடுதலையாக்கி, இரட்சிப்பின் பாதையில் நடத்தி, பரம எருசலேமுக்கு நேராய் நடத்தி செல்வோம்!!!

சங்க இலக்கியங்களில் கழுதையைப் பற்றி சில பாடல்களில் கூறப்பட்டுள்ளன. சங்ககாலத்தில் தமிழர்கள் பொதிசுமந்து செல்வதற்கே கழுதைகளைப் பெரிதும் பயன்படுத்தி இருக்கின்றனர். உப்பளங்களில் விளைந்த உப்பின் மூட்டைகளையும் மிளகுப் பொதிகளையும் கழுதைகளின்மேல் ஏற்றிக்கொண்டு வணிகர்கள் சென்றதைப் பதிவுசெய்துள்ளன. போரில் வெற்றிபெற்ற மன்னர்கள், தோற்ற மன்னர்களின் ஊர்களில் இருந்த தெருக்களில் எல்லாம் கழுதைகளைப் பூட்டி உழுது அவர்களை அவமானப்படுத்திய செய்திகள் சங்க இலக்கியங்களில் காணப்பெறுகின்றன. இந்தியாவில் குறிப்பாகச் சங்ககாலத் தமிழர்களால் வளர்க்கப்பட்ட கழுதைகளின் விலங்கியல் பெயர் Equus Africanus Asinus ஆகும். கழுதைகளில் கருப்பு, பழுப்பு, வெளுப்பு உட்பட பல்வேறு நிறங்கள் உண்டென்றாலும் உடலமைப்புக் கூறுகளும் பயன்பாடும் அனைத்துக்கும் பொதுவானவையே. இந்த மாதம் கழுதையைக் குறித்து பார்க்கலாம்.

**கழுதை** (Donkey) என்பது பாலூட்டி இனத்தைச் சேர்ந்த ஒரு விலங்காகும். இதன் விலங்கியல் பெயர் Equus Asinus. இது ஒரு தாவர உண்ணி. இது குதிரை இனத்தைச் சேர்ந்தது. கழுதை, பாலூட்டிகளில் குதிரை, வரிக்குதிரையைப் போல ஒற்றைப்படைக் குளம்பிகள் வரிசையைச் சேர்ந்த ஒரு விலங்கினம். கழுதைகள் மிதமான பாலைநிலங்களில் வாழவல்லவை. மனிதனின் வளர்ச்சிக்காக உழைக்கும் விலங்குகளில் கழுதை இனமும் ஒன்று. உலகில் 40க்கும் மேற்பட்ட அங்கீகரிக்கப்பட்ட கழுதை இனங்கள் உள்ளன.

கழுதைகளில் இன்னொரு வகை அத்திரி என்று பெயர் பெறும். இதை கோவேறு கழுதை எனவும் கூறுவர். இது வணிகப் பொருள்களை ஏற்றிச் செல்ல பயன்படவில்லை. செல்வம் மிகுந்தவர்கள் தாம் செல்ல ஊர்தியாகப் பயன்படுத்தினர். அத்திரிக்கு இராசவாகனம் என்றும் பெயர் வழங்கப்பட்டது.

கழுதை மற்ற விலங்குகளை காட்டிலும் அதிகப்படியான பொறுமையினையும், அதன் மேலே அதிக எடையினை சுமக்கும் திறன் கொண்டது. ஆதலால் கழுதை பொறுமைக்கும், சகிப்புத்தன்மைக்கும் மிகவும் பெயர் பெற்ற ஒன்றாகும். குதிரைகளை விட சிறியதாக இருந்தாலும், கழுதைகள் உறுதியான கால்களைக் கொண்டவை. எனவே இவை கடுமையான வெயிலைப் பொறுத்துக்கொண்டு கரடுமுரடான பகுதிகளில் மிகுந்த பாரம் தூக்கிச் செல்ல பயன்படுத்தப்படுகின்றன.

பெரும்பாலான காட்டுக் கழுதைகள் 102-142 செ.மீ உயரம் வரை இருக்கின்றன. வீடுகளில் வளர்க்கப்படும் கழுதைகள் 91-142 செ.மீ உயரம் வரை இருக்கின்றன. 50 ஆண்டுகள் வரையும் வாழும் தன்மை கொண்டது.

முகத்தில் மூக்கின் அருகே வெண்மையாக இருப்பது இதன் அடையாளங்களில் ஒன்று. கழுதைகளுக்கு காதுகள் இரண்டும் பெரிதாக இருக்கும். அதற்கு இரண்டு காரணங்கள் இருக்கிறது. ஒரு கழுதை வெட்ட வெளியில் கத்தினால் 60 மைலுக்கு அந்த பக்கம் இருக்கிற கழுதைக்கு அது கேட்குமாம். அவை பெரும்பாலும் 'ஹீ-ஹா' என்று விவரிக்கப்படும் சத்தமான ஒலியை எழுப்புகின்றன. மற்றொரு விஷயம் காதுகள் பெரிதாக இருப்பதினால் உடம்பு சூடாகாமல் குளிர்ச்சியாக தன்னை பாதுகாத்துக் கொள்ளும்.

இவை பெரும்பாலும் புல், தாவரங்கள் சாப்பிடும். இவை குதிரைகளை விட குறைவான உணவே உட்கொள்கின்றன. அதிகமான உணவு கொடுக்கப்படும் கழுதைகள் 'லேமினிடிஸ்' என்னும் நோயால் பாதிக்கப்படுகின்றன.

கழுதைகளுக்கு மழை என்றாலே பிடிக்காது. அதற்கு காரணம் மழையை தாங்கக்கூடிய தோல் அதற்கு இல்லை. அதனுடைய தோல் மிகவும் சென்சிட்டிவ். மழையில் நனைந்தால் தனது உடல் பாதிப்படையும் என்பது அதற்கு நன்றாகவே தெரியும்.

கழுதைகளுக்கு கூட்டமாக இருப்பதை விட தனியாக இருப்பது தான் பிடிக்கும். அதனால்தான் கூட்டத்தில் இருக்கும் கழுதைகளை விட தனியாக இருக்கும் கழுதைகள் சுறுசுறுப்பாக வேலை செய்யும். அதைப் போல கழுதைகளுக்கு ஆடுகளுடன் இருப்பது பிடிக்கும்.


கழுதைகள் நம்பமுடியாத அளவிற்கு புத்திசாலிகள், அவை தங்களுக்கு முன்னால் உள்ள நிலப்பரப்பையும், தங்கள் முதுகில் உள்ள சுமையையும் மதிப்பிட முடியும், மேலும் சமநிலையை இழக்காமல் இருக்க தங்களைத் தாங்களே நிலைநிறுத்திக் கொள்ளும்.

25 வருடங்களுக்கு முன்பு சந்தித்த நண்பர்கள் மற்றும் நபர்களை இது ஞாபகத்தில் வைத்துக் கொள்ளும். என்னதான் கழுதைகள் அப்ராணி விலங்குகளாக இருந்தாலும் தனக்கு பிடிக்கவில்லை என்றால் நாம் என்னதான் வற்புறுத்தினாலும் அடித்தாலும் அந்த இடத்தைவிட்டு நகராது. அதை மீறி நாம் கட்டாயப்படுத்தினால் அது நம்மை உதைத்து விடும். அதுவே கழுதைக்கு ஒருவரை பிடித்துவிட்டால் சோறு தண்ணீர் இல்லாமல் பாரம் தூக்கும். கழுதைகள் எந்த விஷயத்தை செய்தாலும் அதை யோசித்து தான் செய்யுமாம். பாதுகாப்பு இல்லை என அது உணர்ந்தால் அந்த விஷயத்தை செய்யாது.

கழுதைப்பாலின் சத்துக்கள் மற்றும் மருத்துவ நன்மைகளை அறிந்து ரோமானியர்கள் வீடுகளில் கழுதைகளை பாலுக்காக வளர்த்தார்கள். இங்கிலாந்து நாட்டின் சில பகுதிகளில் தாய்ப்பாலுக்கு நிகராக கழுதைப்பால் பயன்படுத்தப்பட்டது.

**தேவன் தாம் உண்டாக்கின எல்லாவற்றையும் பார்த்தார். அது மிகவும் நன்றாயிருந்தது. சகலத்தையும் உண்டாக்கினவருக்கு நன்றி.**

தன் குட்டியிடம் செல்வதற்கு கழுதைக்கு சரியான வழிகாட்டுங்கள் குழந்தைகளே.



# ஐத்திகு! ஐத்திகு!

ஜுவான் தனது வீட்டு முற்றத்தில் பொம்மைகளை எடுத்துக்கொண்டிருந்தான். அடுத்த வீட்டில், அவரது நண்பனின் தங்கை டினா தனது சைக்கிள் ஓட்டுவதைப் பயிற்சி செய்து கொண்டிருந்தாள். ஜுவான் திடீரென்று சத்தம் கேட்டு திரும்பிப் பார்த்தபோது, டினா தனது அஞ்சல் பெட்டியில் மோதி, தனது பைக்கில் இருந்து விழுந்திருப்பதைக் கண்டான். உடனடியாக அவளைத் தூக்க ஓடினான். சில நிமிடங்களில் அவள் மீண்டும் தனது பைக்கில் வந்தாள். அவசரநிலை முடிந்தது.

மிகவும் கடுமையான அவசரநிலை மற்றும் உதவி செய்த ஒருவரைப் பற்றிய கதை இங்கே. இது இப்படித்தான் நடந்திருக்கலாம் (வாசிக்க: அப்போஸ்தலர் 20:1-12).

மூன்றாவது மாடியில் உள்ள கூட்ட அறை நெரிசலாக இருந்தது. துரோவாவில் உள்ள அனைவரும் பவுலுக்கு விடைபெற வந்திருப்பது போல் தோன்றியது. இன்றிரவு அவர் அவர்களுடன் இருந்த கடைசி இரவு. ஆனால் யாரும் அவரை வெளியேற விரும்பவில்லை! ஒன்றாக சாப்பிட்ட பிறகு, அவர்கள் பவுலை மீண்டும் ஒரு முறை பிரசங்கிக்கச் சொன்னார்கள்.

‘இயேசுவில் பலமாக இருங்கள்!’ பவுல் ஊக்கப்படுத்தினார்.

பவுல் பேசும்போது நேரம் வேகமாக கடந்துவிட்டது, சிறிது நேரத்திலேயே நள்ளிரவு. திறந்திருந்த ஜன்னலின் ஓரத்தில் அமர்ந்திருந்த ஐத்திகு கொட்டாவி விடத் தொடங்கினான். நீண்ட நாளாகிவிட்டது, வெப்பம் அவனைத் தூக்கத்தில் ஆழ்த்தியது.

அவன் ஜன்னல் ஓரத்தில் சிறிது சாய்ந்து அமர்ந்தான். அவன் தாமதமாக வந்திருக்கலாம். அறை மிகவும் கூட்டமாக இருந்ததால், அது ஒரு நல்ல இருக்கை போல் தோன்றியது. ஒருவேளை அது கொஞ்சம் குளிராக இருக்கலாம். அவன் மீண்டும் கொட்டாவி விட்டான்.



திடீரென்று ஐத்திகுவின் அருகில் அமர்ந்திருந்த ஒரு நண்பன் மூச்சுத் திணறினான். ‘‘ஐத்திகு!’’ என்று அவர் கத்தினான். ‘‘ஓ, இல்லை! ஐத்திகு ஜன்னலிலிருந்து கீழே விழுந்தான்!’’

அந்த மனிதன் படிக்கட்டுகளுக்குச் செல்லும் கதவு வழியாக குதித்து தெருவுக்கு ஓடினான். பவுல் அவனுக்குப் பின்னால் நெருங்கிப் பின்தொடர்ந்தார்.

அறையில் இருந்த மற்ற அனைவரும் அதிர்ச்சியடைந்தனர்.



ஏதாவது செய்ய முடியுமா என்று பார்க்க பலர் கீழே ஓடினர். அவர்கள் ஐத்திகுவிடம் விரைந்தனர், ஆனால் பவுல் மிகவும் அமைதியாக இருந்தார். அவர் இறந்துவிட்டார் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. மக்கள் திகைத்துப் போனார்கள்; அவர்களுக்கு என்ன சொல்வது என்று தெரியவில்லை.

குனிந்து, பவுல் ஐத்திகுவைத் தூக்கித் தன் கைகளில் ஏந்திக் கொண்டார். அமைதியாக ஜெபம் செய்தார். கடைசியில் பவுல் தன் நண்பர்களைப் பார்த்தார். 'கவலைப்படாதே' என்று கூறினார். 'ஐத்திகு உயிருடன் இருக்கிறார்!'

ஐத்திகு கண்களைத் திறந்து சுற்றிப் பார்த்தான். தனது நண்பர்களின் முகங்களில் கண்ணீர் வழிந்ததைக் கண்டான். 'என்ன நடந்தது?' என்று கேட்டார். 'ஏன் அழுகிறாய்?'

இரவு இப்போது அமைதியாக இல்லை! அனைவரும் திடீரென்று விழித்திருந்து மகிழ்ச்சியால் நிறைந்திருந்தனர். 'ஐத்திகு! ஐத்திகு, நீ உயிருடன் இருக்கிறாய்! ஓ, நன்றி, தேவனே!' என்று அவர்கள் ஆனந்த கண்ணீர் விட்டனர்.

படிக்கட்டுகளில் ஏறி, சூடான அறைக்குள் சென்றனர். இப்போது யாருக்கும் தூக்கம் வரவில்லை! பவுல் விழித்திருந்த கூட்டத்தினரிடம் தொடர்ந்து பிரசங்கித்தார். அதிகாலை வரை தனது நண்பர்களுடன் பேசினார்.

பவுல் தனது நண்பர்களிடம் இயேசுவைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தாலும், ஐத்திகுவுக்கு உதவ உடனடியாக நின்றார். தேவன் நாம் செய்ய வேண்டியது இதுதான். எந்த நேரத்திலும் மற்றவர்களுக்கு உதவ இயேசுவிடம் கேளுங்கள். இயேசுவைச் சேவிப்பது என்பது மற்றவர்களுக்கு உதவ தயாராகவும் விருப்பமாகவும் இருப்பது, குறிப்பாக அவசர காலங்களில்.

10ஆம் பக்கத்தின் விடைகள்

## கர்த்தரால் ஆகாத காரியம் உண்டோ? - பதில்கள்

1. கர்த்தருடைய தூதனானவர், 2. லகாய்ரோயீ, 3. நீர் என்னைக் காண்கிற தேவன்
4. இஸ்மவேல், 5. ஆபிரகாம், 6. சாராள், 7. மூன்று புருஷர், 8. பதின்மூன்று
9. ஈசாக்கோடே, 10. இஸ்மவேல்

## "மரித்த ஐத்திகு உயிர்த்தான்" தொடர்புடைய சொற்களை கண்டு வட்டமிடுக. (வாசிக்க: அப். 20:1-12)

உயிர்
அப்பம்
ஜன்னல்
விளக்கு
மேல்வீடு
சீஷர்கள்
துரோவா
வாலிபன்
பிரசங்கம்



காயு
பவுல்
பிலிப்பி
ஐத்திகு
ஆசியா
நித்திரை
நடுராத்திரி
மக்கெதோனியா
மூன்றாம் மெத்தை

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| உ | சீ | ப | பி | ர | ச | ங் | க | ம் | சி |
| ஆ | மே | த் | ந | சீ | ஷ | ர் | க | ள் | மூ |
| சி | ல் | கு | வி | ள | க் | கு | ப | ம | ன் |
| யா | வீ | ஜ | ன் | ன | ல் | உ | வு | க் | றா |
| நி | டு | ஐ | த் | தி | கு | யி | ல் | கெ | ம் |
| த் | பி | லி | ப் | பி | மூ | ர் | கா | தோ | மெ |
| தி | ரி | கா | அ | ப் | ப | ம் | யு | னி | த் |
| ரை | ல் | ந | டு | ரா | த் | தி | ரி | யா | தை |
| ள | வா | லி | ப | ன் | டு | து | ரோ | வா | தி |

# வேதமே வெளிச்சம்



1 சாமுவேல் 12:22
God bless you
கர்த்தர் உங்களைத் தமக்கு ஜனமாக்கிக்கொள்ளப் பிரியமானபடியினால், கர்த்தர் தம்முடைய மகத்துவமான நாமத்தினிமித்தம் தமது ஜனத்தைக் கைவிடமாட்டார்.


கர்த்தர் உனக்குப் பரிபூரண நன்மை உண்டாகக் கட்டளையிடுவார்.
உபாகமம் 28:11
God bless you
ஆமென்.



இரட்சிப்பு கர்த்தருடையது; தேவரீருடைய ஆசீர்வாதம் உம்முடைய ஜனத்தின்மேல் இருப்பதாக.
சங்கீதம் 3:8
God bless you


God bless you
மாற்கு 11:24
இயேசு: நீங்கள் ஜெபம்பண்ணும்போது எவைகளைக் கேட்டுக்கொள்வீர்களோ, அவைகளைப் பெற்றுக்கொள்வோம் என்று விசுவாசியுங்கள், அப்பொழுது அவைகள் உங்களுக்கு உண்டாகும் என்று சொல்லுகிறேன்.


# இதுதான்டா சர்ஜிக்கல் ஸ்டிரைக்
## (துல்லிய தாக்குதல்)





எனக்குப் பிரியமான சகோதரரே, கர்த்தருக்குள் நீங்கள் படுகிற பிரயாசம் விருதாவாயிராதென்று அறிந்து, நீங்கள் உறுதிப்பட்டவர்களாயும், அசையாதவர்களாயும், கர்த்தருடைய கிரியையிலே எப்பொழுதும் பெருகுகிறவர்களாயும் இருப்பீர்களாக.
1 கொரிந்தியர் 15:58




நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார். 1 யோவான் 1:9




நாளைக்கு நடப்பது உங்களுக்குத் தெரியாதே. உங்கள் ஜீவன் எப்படிப்பட்டது? கொஞ்சக்காலந்தோன்றிப் பின்பு தோன்றாமறற்போகிற புகையைப்போலிருக்கிறதே.
யாக்கோபு 4:14




அவர் அவர்களை நோக்கி: ஏன் இப்படிப் பயப்பட்டீர்கள்?
ஏன் உங்களுக்கு விசுவாசம் இல்லாமற்போயிற்று என்றார். மாற்கு 4:40

# உலக உணவு நாள்



ஒவ்வோர் ஆண்டும் அக்டோபர் 16ஆம் தேதி **உலக உணவு நாள்** கடைப்பிடிக்கப்படுகிறது. ஐக்கிய நாடுகள் சபையின் உணவு மற்றும் வேளாண் அமைப்பு தொடங்கப்பட்ட நாளே, 1979லிருந்து உணவு நாளாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. இந்த நாள் உணவுப் பற்றாக்குறை, ஊட்டச்சத்து குறைபாடு மற்றும் பசி, பட்டினியால் அவதிப்படும் மக்கள் பற்றி விழிப்புணர்வை ஏற்படுத்துவதை முக்கிய நோக்கமாகக் கொண்டது.

உலகில் உள்ள அனைத்து உயிர்களும் உயிர்வாழ அடிப்படை ஆதாரம் உணவுதான். நோய் நொடியின்றி மனிதன் உயிர்வாழ தேவையான ஊட்டச்சத்து, உணவு மூலமாகத் தான் நமக்கு கிடைக்கிறது. கால நிலை மாற்றங்கள், மோதல்கள், பொருளாதார வீழ்ச்சி, சரிநிகரற்ற தன்மை, தொற்று நோய்கள் என காரணங்களால் உலகில் 73 கோடியே 30 இலட்சம் பேர் இன்னும் பசியால் வாடிக்கொண்டிருக்கின்றனர். ஒவ்வொரு நாளும் ஐந்துக்கு ஒருவர் பசியால் உறங்கச் செல்கின்றனர்.

உலகில் 10 பேரில் ஒருவர் ஊட்டச்சத்து குறைபாடு பிரச்சனையை எதிர்கொள்கிறார். 2020ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி, உலகளவில் 5 வயதுக்குட்பட்ட ஐந்து குழந்தைகளில் ஒருவர் வளர்ச்சி குறைவாக உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. உலகில் இறக்கும் குழந்தைகளுள் பாதிபேர் சத்துணவின்மையால் உயிரிழக்கின்றனர். ஒவ்வோர் ஆண்டும் பசி தொடர்புடையவைகளால் உயிரிழக்கும் 90 இலட்சம் பேரில் பெரும்பான்மையினோர் 5 வயதிற்குட்பட்ட குழந்தைகள். ஏழ்மையும் பசியும் ஆப்பிரிக்காவில்தான் தங்கள் வசிப்பிடத்தை அதிக அளவில் கொண்டுள்ளன.

இந்த உலகில் 35 விழுக்காட்டு மக்கள், அதாவது, 280 கோடி பேர் ஆரோக்கியமான உணவைப் பெறுவதற்கான வசதியற்றவர்களாக இருக்கின்றனர். குறைந்த வருமானம் உள்ள நாடுகளில் 71.5 விழுக்காட்டு மக்கள் ஆரோக்கியமான உணவை பெறுவதற்கான வசதிகளின்றி உள்ளனர். அதேவேளை, வருமானம் நிரம்பிய நாடுகளிலோ 6.3 விழுக்காட்டு மக்கள் ஆரோக்கியமான உணவை வாங்குவதற்கான வசதிகளின்றி உள்ளனர்.

வட கொரியா, மத்திய ஆப்பிரிக்க குடியரசு, லைபீரியா, நிஜர், ஹெய்ட்டி, காங்கோ

ஜனநாயகக் குடியரசு, மடகாஸ்கர், சாடு, ஏமன், சொமாலியா, புருண்டி, தென்சூடான் போன்ற நாடுகள் உலகில் பசியை அதிக அளவில் அனுபவித்துவரும் நாடுகள்.

ஆப்பிரிக்க மற்றும் தெற்காசிய நாடுகளில் சத்துணவின்மை, குழந்தைகள் இறப்பு விகிதம் அதிகரித்து வருகிறது. உணவு பாதுகாப்பின்மையாலும் சத்துணவின்மையாலும் அதிகம் பாதிக்கப்படுள்ளவர்கள் பெண்களும் சிறுமிகளும்தான். இவ்வுலகில் பசி இன்னும் தன் ஆதிக்கத்தைக் கொண்டிருக்கும் முக்கியக் காரணங்கள் என்னவென்று நாம் ஆராய்ந்து பார்த்தால் அனைத்திற்கும் மேலாக ஏழ்மை முதலில் வந்து நிற்கிறது. ஏழ்மையில் வாடும் குடும்பத்தால் போதிய உணவை, குறிப்பாக சத்துள்ள உணவைப் பெற முடியாது. போதிய உணவில்லையேல் அக்குடும்பத்தின் குழந்தைகளால் படிப்பில் கவனம் செலுத்த முடியாது.

பல ஏழை நாடுகளில் முந்தைய ஆண்டின் சேமிப்பு பயன்படுத்தப்பட்டு, அடுத்த ஆண்டு அறுவடைக்கு இடைப்பட்ட காலத்தில் விலைவாசிகள் உயர்ந்து, மூன்றுவேளை உணவில் ஒருவேளையை சில குடும்பங்கள் தியாகம் செய்யும் நிலை உருவாகும். இது தவிர, கோவிட் பெருந்தொற்று காலத்தின்போதும், தற்போதைய உக்ரைன் போர்க்காலத்தின் துவக்கத்திலும் இதைத்தான் கண்டோம். போர் மற்றும் மோதல்களின்போதும் மக்கள் பசியால் வாடுவதும் தொடர்கின்றது. ஓர் உதாரணத்திற்கு இரஷ்யா-உக்ரைன் போரை எடுத்துக் கொள்வோம். போருக்கு முன்னர் உலகின் கோதுமை தேவையில் 25 விழுக்காட்டை இவ்விரு நாடுகளும் தான் நிறைவுச் செய்தன, அதாவது ஏற்றுமதிச் செய்தன. ஆனால், இன்றோ அந்த சங்கிலி அறுபட்டு, கோதுமை பற்றாக்குறையும், விலையேற்றமும் இடம்பெற்றுள்ளன. இதனால் ஏழை நாடுகளில் பசியின் பிடி இறுக்கமாகியுள்ளது.

காலநிலை மாற்றம், இன்னொரு காரணமாக உள்ளது. உலகம் வெப்பமாகி வருவதும், இயற்கை பேரிடர்களும் பசியின் கொடுமைக்கு இன்னும் வலுசேர்த்துள்ளன. இது தவிர திட்டமிடாத அரசின் செயல்கள், அரசியல் நிலையற்றதன்மை, மோசமான பொருளாதாரம், உணவை வீணாக்குதல், பாலின பாகுபாட்டு முறைகள், கட்டாயப்படுத்தப்படும் புலம்பெயர்வுகள் என பல காரணங்களால் உலகில் பசி இன்னும் வாழ்ந்து கொண்டிருக்கிறது.

நமது பூமி இங்குள்ள அனைவருக்கும் உணவளிக்க போதுமான உணவை உருவாக்குகிறது. இருப்பினும், ஒவ்வோர் ஆண்டும் 130 கோடி கிலோ உணவு வீணாகிறது. இது மொத்த உணவு உற்பத்தியில் ஏறக்குறைய 20%.

உலக மக்களை பசிக்கொடுமையில் இருந்து ஒரே நாளில் மீட்டுவிட முடியாது. ஆனால், முடிந்தவரை ஒவ்வொருவரும் இதில் பங்கேற்க முடியும். முதலில் தாங்கள் உண்ணும் உணவை வீணாக்குவதைத் தவிர்க்கலாம். ஒரு பருக்கை சோறாக இருந்தாலும் அதை வீண் செய்யக்கூடாது என உறுதியாக இருக்கலாம். வீட்டில் குழந்தைகளுக்கு இப்போதிலிருந்தே உணவின் முக்கியத்துவத்தை கற்றுக்கொடுங்கள். அதுமட்டுமன்றி, உணவு மீந்துவிட்டால் பசியால் தவிக்கும் மக்களுக்கு தானமாக அளிக்கலாம். தேவைக்கு மட்டும் சாப்பிடுவதில் கவனம் செலுத்தினால், உணவை வீணாக்குவதையும், பசியுடன் படுக்கைக்குச் செல்லும் நபர்களின் எண்ணிக்கையையும் குறைக்கலாம். உலக உணவு தினம் என்பது அளவுக்கு அதிகமாக உண்பதை தவிர்க்கவும், சுற்றுச்சூழலுக்கு உகந்த முடிவுகளை எடுக்கவும் நினைவூட்டுகிறது.

உலகில் உணவுப் பற்றாக்குறையை நிவர்த்திச் செய்ய நம்மால் இயன்றதை ஆற்றுவோம். பகிர்தலும், வீணாக்காத மனமும் இருந்தால் போதும், நாமும் இதில் பங்களிக்கலாம்.

# கவனமாயிருங்க...



தமிழ்நாட்டில் இன்புளூயன்சா வைரஸ் காய்ச்சல் அதிகரித்து பொதுமக்கள் சளி, இருமல், தொண்டை வலி, தலைவலி, உடல்வலி உள்ளிட்ட பல்வேறு பாதிப்புகளால் அவதிப்பட்டு வருகின்றனர். அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளில் சிகிச்சை பெறுவோரின் எண்ணிக்கை உயர்ந்துள்ளது. காய்ச்சல் சில நாட்களில் குறைந்தாலும், இருமல் மற்றும் உடல் சோர்வு இரண்டு முதல் மூன்று வாரங்களுக்கு நீடிப்பதாக மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில், சென்னையில் டெங்கு நோய்த்தொற்றும் இணைந்து அதிகரித்திருப்பது சுகாதாரத்துறைக்கு கூடுதல் சவாலாக உள்ளது. தண்ணீர் மாசுபாடே முக்கிய காரணம் என்பதால், பொதுமக்களுக்கு வழங்கப்படும் குடிநீர் தீவிரமாக கண்காணிக்க வேண்டும் என்று கோரிக்கையும் எழுந்துள்ளது.

இன்புளூயன்சா பரவல் காலகட்டங்களில் குழந்தைகள் மற்றும் முதியவர்கள் முன்னெச்சரிக்கையாக இருப்பது அவசியம்.

மேலும், முககவசம் அணிவது, கூட்டநெரிசலை தவிர்ப்பது, வெளியூர் பயணங்களை குறைப்பது போன்ற முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் அனைவரும் கடைபிடிக்க வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது. மேலும் தினமும் போதிய அளவு தூங்குவது, ஓய்வெடுப்பது, புரதச்சத்து நிறைந்த உணவுகள், கீரை மற்றும் பச்சை காய்கறிகளை அதிகமாக எடுத்துக்கொள்வது, குடிநீரை நன்றாகக் கொதிக்கவைத்து அருந்துவது உடல்நலத்திற்கு நன்மை தரும் என கூறுகின்றனர்.

டெங்கு வருவதற்கான அபாயத்தைக் குறைக்க, கொசுக் கடியிலிருந்து குழந்தைகளைப் பாதுகாத்துக் கொள்ள, பின்வருவனவற்றைப் பயன்படுத்துங்கள்:

வீட்டைச் சுற்றி மழை நீர் தேங்காது பார்த்துக் கொள்வதுடன், கொசு கடிக்காமல் பார்த்துக் கொள்ளவும்.

திடக்கழிவுகளை முறையாக அப்புறப்படுத்தி, மற்றும் தண்ணீரைத் தேக்கி வைக்கக்கூடிய செயற்கை வாழ்விடங்களை அகற்றுங்கள்.

வீட்டு நீர் சேமிப்பு கொள்கலன்களை வாரந்தோறும் மூடி, காலி செய்து சுத்தம் செய்யுங்கள்.

குழந்தைகளின் உடலை முடிந்தவரை மறைக்கும்படியான ஆடைகள் அணியச் செய்யுங்கள்.

குழந்தைகள் தூங்கும்போது கொசுவலை உபயோகப்படுத்தச் செய்யுங்கள்.

ஜன்னலுக்கு திரைகள் அல்லது கொசுவலை போடுங்கள்.

கொசு விரட்டிகள், சுருள்கள் மற்றும் ஆவியாக்கிகளை பயன்படுத்துங்கள்.

கர்த்தருடைய தூதன் அவருக்குப் பயந்தவர்களைச் சூழப் பாளயமிறங்கி அவர்களை விடுவிக்கிறார். (சங்கீதம் 34:7)




கர்த்தரோ உண்மையுள்ளவர், அவர் உங்களை ஸ்திரப்படுத்தி, தீமையினின்று விலக்கிக் காத்துக்கொள்ளுவார். (2 தெசலோனிக்கேயர் 3:3)

# வங்கிக் கணக்கின் (Bank Account) விபரம்:

ஏலிம் ஊழியங்கள் மற்றும் அன்றன்றுள்ள அப்பம் ஊழியங்களை பொருளாதார உதவிகளால் தாங்க விரும்பினாலோ, காசோலை (Cheque) / கேட்பு வரைவோலை (Demand Draft) மூலம் அனுப்புவதாக இருந்தாலோ, கீழ்க்காணும் ஏதேனுமொரு பெயரில் எடுத்து எமது அலுவலக முகவரிக்கு பதிவு அஞ்சல் (Registered Post) அல்லது தூதஞ்சல் (Courier) மூலமாக அனுப்பலாம்.

1. ACCOUNT NAME : **MR. JOSEPH OSBORNE JEBADURAI**
   ACCOUNT NO. : 49 510100003062

2. ACCOUNT NAME : **ANTANTULLA APPAM TRUST**
   ACCOUNT NO. : 49510200000122
   BANK NAME : **BANK OF BARODA**
   IFSC CODE : BARB0KODAMB (5TH CHARACTER IS ZERO)
   SWIFT CODE : BARBINBB
   BRANCH & CODE : UNITED INDIA COLONY, KODAMBAKKAM & 4951
   CHENNAI – 600 024.

**APPAM - GOOGLE PAY : 98406 95296**

**ELIM - GOOGLE PAY : 98848 77607**

**Address : J. JOSEPH OSBORNE JEBADURAI**
**50, Railway Station Road, Kodambakkam, Chennai - 600 024. Tamil Nadu**

1. ACCOUNT NAME : **ELIM GLORIOUS REVIVAL CHURCH**
   ACCOUNT NO. : 49510100000230

2. ACCOUNT NAME : **MR. JOSEPH OSBORNE JEBADURAI**
   ACCOUNT NO. : 49510100003063
   BANK NAME : BANK OF BARODA
   IFSC CODE : BARB0KODAMB (5TH CHARACTER IS ZERO)
   BRANCH : KODAMBAKKAM
   CHENNAI - 600024

நானும் என் வீட்டாருமோவென்றால், கர்த்தரையே சேவிப்போம் யோசுவா 24 : 15

ஏலிம் மகிமையான எழுப்புதல் தேவாலயம்



# குடும்ப ஆசீர்வாத எழுப்புதல் ஜெபம்

ஒவ்வொரு மாதமும் மூன்றாவது சனிக்கிழமை

காலை 9.00 மணிமுதல் மதியம் 1.30 மணிவரை



அன்புடன் அழைக்கும்

**PASTOR OSBORNE JEBADURAI**

## மதியம் உணவு உண்டு

**ஏலிம் மகிமையான எழுப்புதல் தேவாலயம்**

50, இரயில்வே ஸ்டேஷன் ரோடு, கோடம்பாக்கம், சென்னை 600024.

**9884908777, 9003067777**

Date of Publication on Last Week of Previous Month
REGISTRAR OF NEWSPAPER FOR INDIA
TNTAM/2006/17835
Posted on 19th & 20th at RMS/1
Patrica Channel, Egmore, Ch - 8.

உங்கள் துக்கம் சந்தோஷமாக மாறும். யோவான் 16:20

ஏலிம் மகிமையான எழுப்புதல் தேவாலயம்



நடத்தும்

# குடும்ப ஆசீர்வாத எழுப்புதல்

## அக்கினி அபிஷேக முகாம்

அக்டோபர்
**2,3**
வியாழன், வெள்ளி
9 AM TO 1 PM
**2025**

அன்புடன் அழைக்கும்

**Pastor OSBORNE JEBADURAI**



பாவமா ?
வியாதியா ? வாருங்கள்
கவலையா ? அற்புத விடுதலையைப்
கண்ணீரா ? பெற்றுக்கொள்ளுங்கள்

தனிமனித எழுப்புதல் | குடும்ப எழுப்புதல் | தேச எழுப்புதல்
வாருங்கள் ஜெபிப்போம்! தேசத்தில் & குடும்பத்தில் எழுப்புதலை காண!

மதிய உணவு உண்டு

ஏலிம் மகிமையான எழுப்புதல் தேவாலயம்
50, இரயில்வே ஸ்டேஷன் ரோடு, கோடம்பாக்கம், சென்னை–600024
தொடர்புக்கு : 9884908777, 9003067777
ELIMGRC | ANTANTULLA APPAM

அனுமதி இலவசம்

If undelivered please return to:

**Elim Glorious Revival Church**
#50, Railway Station Road, Kodambakkam, Chennai - 600024, India
for 24X7 Prayer: 91-9444322200, 9444322211
Email: enquiry@elimgrc.com, Website: www.elimgrc.com